ஸ்ரீ திரிபுரசுந்தரீ ஸமேத ஸ்ரீசந்திரமௌளீசுவராய நம:

ஆர்ய தர்மம்.

अहं न चेत् स्यां मयि दुष्टभावनामिमे व्रजेयुर्न निराश्रया जना: ।
तदेनसा योजयिता परान् स्वयं ममैव युक्ताऽत्र पराह्यपत्रपा ॥

"நான் இல்லாவிடில் என்னிடத்தில் இவர்கள் கெட்ட எண்ணத்தை அடையமாட்டார்கள். கெட்டநினைப்புக்கு விஷயமாகக்கூடிய நானொருவனிருக்கக்கொண்டல்லவா அதை என்னிடம் செலுத்தினர். அதற்கு ஆசிரயமாக நானில்லாவிடில் துஷ்டபாவனையைச் செலுத்த இஷ்டமில்லாமையால் அதையடையப்போவதில்லை. ஆகையால் நானொருவனிருப்பதுகொண்டு பிறர் அந்த பாபத்தோடு சேர்ந்துவிடும்படி நான்தான்செய்ததாக ஆகிறது. ஆகவே இந்தவிஷயத்தில் நான்தான் வெட்கமடையவேண்டியது யுக்தமாகிறது" என்று ஸாதுக்கள் நினைப்பார்கள். ஒருவன் தனக்குக்கெடுதலைச்செய்ய நினைப்பானேயானால் அப்பொழுது ஸாதுக்கள் "எவ்விதம் இவன் அப்படி நினைக்கலாம்" என்று பிராகிருதர்களைப்போல அவஸரப்பட்டு ஆத்திரப்பட்டு விடமாட்டார்கள். ஆனால் நிதானித்துக் கொண்டு ஆலோசிப்பார்கள். பிறர் அப்படி நினைப்பதற்குக் காரணம் முதலாவது நான்தான். எப்படியேனில் நானென்று ஒருவன் இருப்பதாற்றானே அவர் அப்படி நினைக்க இடமாயிற்று. அப்படி அவர் துஷ்டபாவனையையடைந்து, துரோஹம்செய்யத் துணியக்கூடிய பாபத்தையும் செய்யநேருவதற்கும் நான்தான் காரணமாகிறேன். நானில்லாவிடில் எங்கே துஷ்டபாவனையைச் செலுத்தப்போகிறார்கள்? அதனாலேற்படும் பாபத்தோடுதான் சேரப்போகிறார்கள். அதொன்றும் நடக்கப்போவதில்லை. அப்படியிருக்கையில் பிறர்மீது குற்றம்சுமத்துவது துர்ப்புத்தியாலேயன்றி வேறில்லை. தானும் பாபம் செய்யக்கூடாது. பிறரும் பாபத்தோடு சேருவதற்கு எவ்விதத்திலும் தான்நிமித்தமாக ஆகக்கூடாது. இதல்லவா சாஸ்திரங்களின் உண்மையான இரஹஸ்யம். அப்படியிருக்கப் பிறர் துஷ்டபாவனையை அடைவதற்கு நானிருப்பதே நிமித்தமாயிற்று. என்னைக் காணாவிடில் அல்லது நானே இல்லாவிடில் இந்தக் கெடுதி நேரப்போகிறதா? இல்லை. ஆகவே பிறரைப் பாபத்திற்கு ஆளாக்கின நான்தான் இந்த விஷயத்தில் வெட்கமடையவேண்டுவது நியாயம். பிறரைச் சொல்லுவதில் யாதொரு காரணமுமில்லை. என்றிவ்வாறு ஒவ்வொருவனும் நிதானித்து யோஜித்துப்பார்த்து நல்லபாவனையையடைந்து சாந்தியடைவானாகில் ஒருவன்மீதும் குற்றம்சுமத்தக் காரணமிராது. இந்த நிலைமை பரமஸாத்துவிகர்களுக்குத்தான்நேரும். நம் முன்னோர்களிருந்தார்கள். அதனால் சிரேயஸ்ஸை அடைந்தார்கள். அதுபோலவே யாவரும் அடைவார்களாக.

சுபம்.

பத்திராதிபர்.

ஆர்ய தர்மம்.

ப்ரஜாபதி-ஸூ பங்குனிமீ ௧௧௨

ஸாத்திய-ஹம்ஸ ஸம்வாதம்.

ஸத்தியவசனம், இந்திரிய ஜயம், பொறுமை, நல்ல அறிவு இவைகளைப் பண்டிதர்கள் பிரசம்ஸிக்கிறார்கள். இதுவிஷயத்தில் தங்கள் மதம் எப்படி? என்று பீஷ்மாசாரியாரை தர்மபுத்திரர் கேட்டார். அதற்கு அப் பெரியாரும் இதுவிஷயத்தில் ஸாத்தியர்கள் எனப்படும் ஓர் தேவ வகுப்பினருக்கும் ஹம்ஸபக்ஷிக்கும் நடந்த ஸம்வாதத்தைச் சொல்லத்தொடங்கினார். ப்ரம்மதேவர் ஸர்வஜீவராசிகளையும் ஸம்ரக்ஷிக்க இஷ்டப்பட்ட ஓர் உருவந்தரித்து ஸர்வலோக ஸஞ்சாரம்செய்துவருவது வழக்கம். ஓர் ஸமயத்தில் ப்ரம்மதேவர் பொன்னிறமான ஹம்ஸபக்ஷியின் உருவந்தரித்து ஸாத்தியர்கள் இருக்குமிடம் வந்தார். ஸாத்தியர்கள் அவரைக் கண்டு புண்ணியவசத்தால் உண்மையறிந்து கேட்டார்கள். ஓ! பக்ஷிவேஷம்பூண்ட பரமனே!! தாம் ஸர்வக்ஞரென்றும், தைரியமாய்ச் சொல்லுபவரென்றும் நாங்கள் அறிவோம். நாங்கள் ஸாத்தியர்களென்ற தேவவகுப்பைச் சார்ந்தவர்கள். தங்களிடமிருந்து மோக்ஷ தர்மத்தையறியவிரும்பிக்கேழ்க்கிறோம். தாங்கள் அதை நன்கு அறிவீர்களானபடியால் தயவுசெய்து உபதேசிக்க வேண்டும். மோக்ஷஸாதனங்களுள் மிகச் சிறந்ததெது? தங்கள் மனது எதில் ரமிக்கிறது? எதைச் செய்தால் மனிதன் ஸர்வபந்தத்தினின்றும் விடுபடுவான்? அதைச் சொல்லவேண்டுமென்றார்கள். அப்பொழுது ஹம்ஸரூபியான பிரம்மதேவர் கூறுகின்றார். அமுதமுண்ணும்பாக்கியம்பெற்றவர்களே! கேளுங்கள். தபஸ், இந்திரியங்களை அடக்குதல், ஸத்தியமே சொல்லுதல், ஆத்துமஹிம்ஸை செய்யாமல் ஆத்துமாவை இரக்ஷித்தல், இவைபோன்ற ஸாதனங்கள் சிறந்தவைகளே. ஆயினும் இவைகளுள் மிகச் சிறந்தது சாந்தியேயாம், கடுஞ்சொற்களால் கர்ப்பம் கலங்கச்செய்பவர

காது. பிரியமில்லாத பேச்சைப் பேசக்கூடாது. எந்த வார்த்தையைக் கேட்டால் பிறனது மனம் பதைக்குமோ! அமங்களமாயும், பாபலோகத்தைப் பயனுக அளிப்பதாயுமான அந்தவார்த்தையைச் சொல்லவேகூடாது. வில்லினின்றும் கிளம்பின அம்புகளால் அடிபட்டாலும் அவ்வளவாகத் தாபிக்கமாட்டான். முகத்தினின்றும் வெளிப்பட்ட அப்ரியவசனமென்ற அம்புகளால் அடிபட்டவனேவெனில் இராப்பகலாக சோகப்பட்டு உருகுவான். வில்லினின்றும் வெளிப்பட்ட அம்புகள் மர்மஸ்தானங்கள் தவிர மற்றவிடங்களிலும் புகும். வாயினின்று வெளிப்பட்ட கடுஞ்சொல்லென்னும் அம்புகளோவெனில் பிறனுடைய மர்மஸ்தானங்களிலேயே குறிதவராமல் பிரவேசிக்கும். ஆதலால் அந்த வார்த்தைகளைச் சொல்லவேகூடாது. பிறன் நம்மிடம் கடுஞ்சினங்கொண்டு கடுஞ்சொற்களால் அடித்தாலும் சமனத்தையேயடைய வேண்டும். பிறன் கோபித்தபோதும் எவன் சந்தோஷப்படுவானே! அவன் கோபித்தவனுடைய புண்ணியத்தை அடைந்துவிடுவான். அதிக்ஷேபம் செய்யும்படி தூண்டுவதும், அபிநிவேசத்தைக் கொடுப்பதால் அப்ரியமாகவுள்ளதும்,கொழுந்துவிட்டுக் கிளம்புவதுமானகோபத்தையடக்கும் சக்தியுள்ளவன் சிறந்தவன். எவ்விதத்திலும் தன்னையடக்கிக்கொள்பவன் சிறந்தவனுகையால் தன்னையடக்கிக்கொள்வதைவிட சிறந்தஸாதனம் வேறில்லை என்பதாதியாக பிரம்மதேவர் ஸாத்யர்களுக்கு உபதேசித்தருளினர். அதையே பெரிய உபதேசமாகக்கொண்டு அதன்படியே யாவரும் தன்னையடைக்கி சிரேயஸ்ஸை அடைவார்களாக.

சுபம்.

பத்திராதிபர்.

புராணவிமர்சம், புத்தியின் தத்வம்.

சூட்சும பஞ்சபூதங்களின் கார்யங்களில் மனமும், புத்தியும், அடுத்த இரு சகோதரர்கள் எனலாம். இதில் மனம் தம்பியும், புத்தி தமயனுமாகும். ஆனல் இவ்விரண்டும் விரோதகுணமுள்ளவைகளுமாம். எவ்வாறெனில் மனம் வாயுவைப்போல் விரைவில் அசையுந்தன்மையுள்ளது. கண்டப்பிரதேசத்தில் ஸ்தானம் பெற்

றது. வாயுவைப்போலவே எப்பொழுதும் வெளியில் சஞ்சரித்துத் துஷ்டா துஷ்டங்களைக்கிரஹித்து மனிதனை ஒவ்வொரு நிமிஷமும் அலைத்து ஆட்டிவைக்கும் சக்தியுள்ளது. சகோதரனான புத்தியோவெனில் அக்னியின் அம்சம்பெற்றதும், வஸ்துக்களைப் பகுத்தறியச்செய்யும் சாமர்த்தியமுள்ளதும், சலன மார்க்கத்தில் ஸஞ்சரிக்கப்பட்டதும் நமது க்ஷேம லாபத்தைக்கோறி வுபதேசித்து வருவதும், மனிதனிடம் நிலைபெற்றதுமாகும். அக்னியானது பிரகாசத்தையளித்து உலகவஸ்துக்களின் பகுத்தறிவை விளக்கிக்காட்டுவதெவ்விதமோ அவ்விதமே புத்தியும், விஷயங்களின் உயர்வு, தாழ்வு, நன்மை, தீமை, இவைகளை நமக்கு விளக்கிக்காட்டுகிறது. ஆனால் இவைகளின் சொற்படியே நடந்து மனிதன் ஜீவிக்கவேண்டும். இதில் மனம் சொல்படி நடப்பதா, அல்லது புத்தியின் சொல்ப்படி நடப்பதா, இல்லாவிடில் இரண்டின் சொல்படி நடப்பதா. எவ்விதம் நடந்தால் மனிதன் மேன்மை முதலிய குணமடைவான் என்று இங்கு சற்று ஆலோசிப்பாம்.

மனமானது தனிமையாகவும் சஞ்சரிக்கலாம், புத்தியுடன் கலந்தும் ஸஞ்சரிக்கலாம். இதில் தனியாக ஸஞ்சரிக்கும் மனதின் வசமாக மனிதன் அகப்பட்டுவிட்டால் அவன் காம, குரோதாதி துஷ்டர்களால் பீடிக்கப்பட்டு சுகலேசமற்று சதா துக்கத்தால் வருத்தமடைவான். உதாரணமாக:—ராவணன், துரியோதனன், கம்ஸன் இவர்கள் மிக புத்தி சாமர்த்தியமுள்ளவர்களென்பதில் ஸந்தேகமில்லை. ஆனால் தக்கஸமயத்தில் மாலியவான், விபீஷணன், மண்டோதரி, இவர்கள் உபதேசித்த புத்திமதிகளை ராவணனும், விதுரர், பீஷ்மர், முதலிய மஹான்களின் உபதேசத்தைத் துரியோதனனும், உத்தவர், அக்ரூரர், முதலிய மஹான்களின் உபதேசத்தைக் கம்ஸனும், சிறிதும் அங்கீகரிக்காமல் தனியான மனதின் சொல்படி நடந்து, காமாதிகளால் பீடிக்கப்பட்டு மானம் துறந்து மகிமையிழந்து மரணமடைந்தார்கள். ஆனால் தமையனான புத்தியுடன் கலந்தமனதின் வசப்பட்டவர்கள் அவ்வளவாகக் கெடுதலை அடையமாட்டார்கள். சுகதுக்கங்களைக் கலந்து அனுபவிப்பார்கள். இம்மாதிரி மிச்ரபலனை அனுபவிப்பவர்களே உலகில் அதிகமாவார்கள். இதில் தனியான புத்தியின்வசப்பட்டவர்கள் ஸுகம், மேன்மை, கீர்த்தி, ஸந்தோஷம், இவைகளையே அடைவார்கள்.

இவர்கள்தான் மனோஜயம் பெற்றவர்கள். நித்திய ஸந்தோஷிகள், ஞானிகள், காமாதி சத்ருக்களை வென்றவர்கள். ஆகையால் மனிதன் தன்னிடமிருக்கும் புத்தியின் ஸகாயத்தால் தம்பியான மனதைத் தனக்குள்ளடக்கி வைத்துக்கொண்டு மிக ஜாக்கிரதையாய் முயற்சிப்பானானால் அவன் கிரமமாக மனோஜயம்பெற்று ஆனந்தமடைவான் என்பதில் ஸந்தேஹமில்லை. இக்கருத்தையே உபநிஷத்தும்—

मन एव मनुष्याणां कारणं बन्धमोक्षयोः ।

மனிதனின் உயர்வு, தாழ்வு, பந்தமோட்சம், ஸுகம். துக்கம், இவைகளுக்கு மனமே முக்கிய காரணம் என்று உபதேசிக்கிறது. ஆகையால் நமது செய்கை ஒவ்வொன்றிலும் புத்தியானது தக்க உதவிசெய்யக் கூடிய மித்திரனென்று சொல்ல வேண்டும். நாம் ஒரு காரியத்தைச் செய்யக் கருதும்போதே, புத்தியோடு கலந்து ஆலோஜித்தால் அதனால் வரும் நன்மை, தீமை சுகதுக்கம், கௌரவ அகௌரவம் இவைகளை நன்கு விளக்கி காட்டுகிறது. உதாரணமாக.- ஒருவன் நடுநிசியில் பணமுட்டை உடன் காட்டுவழியாக மற்றொருதேசம் செல்ல நினைக்கிறானென்று வைத்துக்கொள்வோம். அச்சமயம் தன் புத்தியைக்கேட்டால், ஐயோ காட்டுவழிசென்றால் திருடர்கள் உன் தனத்தை அபகரித்துக்கொள்வார்கள். தவிர காட்டுமிருகங்கள் உன்னைக் கண்டால் கொன்று தின்றுவிடும். மேலும் இருட்டில் வழிதவறிவிட்டால் ஆபத்துக்குள்ளாவாய் ஆதலால் ராத்திரி போகாதே பகலில் போவென்று கூறுகிறது. அது கூறுகிறபடி கேட்டால் நன்மையேயடைகிறான். இதுதான் புத்தியின் உபகாரம். இன்னும் ஒருவன் நண்பனிடம் வந்து நண்பா சூதாடுகிறவிடத்திற்கு பத்து ரூபாய் மட்டிலும் கொண்டுபோனால் ஒரு ராத்திரிக்குள் 400 ரூ சம்பாதித்து வறலாமென்று கூறுகிறான் என்று வைத்துக்கொள்வோம். அச்சமயம் புத்தியோடு ஆலோசித்தால் ஆடே நண்பா லாபம்வருவது நிச்சயமில்லை ஒருவேளை நம்மிடமுள்ள தனம் போய்விடக்கூடும். அவ்விதம் போனால் துக்கம் வந்துவிடும். மேலும் எந்த சமயத்திலும் போலீஸார் வந்து பிடித்துக்கொள்ளலாகும். அத்தோடு நமது குடும்பமானமே போய்விடும். தண்டனையையும் அடைவோம் என்று கூறுகிறது. இத்தகைய சமயங்களில் நமது புத்தி கூறுகிறபடி நடந்துகொண்டால் இவன் புத்தி

சாலியென்று அழைக்கப்படுகிறான். அப்படிக்கின்றி புத்தியை அலட்சியம் செய்துவிட்டு மனத்தூண்டுதலின்படி நடந்து துன்பத்துக்குள்ளாயின் இவன் புத்தி கெட்டவன். அவன் சொன்னால் இவன் புத்தி எங்குபோயிற்று என்று தூஷிக்கப் படுகிறான். இதனால் தான் செய்யக்கூடியதை புத்தியோடு நன்கு ஆலோசித்து செய்ய வேணுமென்று விதித்திருக்கிறார்கள். இஃதிவ்விதமிருக்க அனேகர் புத்தியை அலட்சியம் செய்து தன் மனம்போனபடி சென்று கோபம், ஆசை, இவற்றால் தூண்டப்பட்டு புத்தியைக் கவனியாமலே நடக்கிறார்கள். புத்தி ஆகிய தீப ஒளியில் அறிவாகிய எண்ணெயை ஊற்றி நோக்கினால் விஷயங்களின் பலாபலன்கள் நன்கு புலப்படும். சர்வேசுவரன் கருணையோடு இக்கருவிகளை நமக்களித்திருக்க நாம் அவற்றைச் சரியானபடி உபயோகிக்காமல் மாயாஸம்மந்தமான ஆசை முதலியவற்றால் மயக்கம் கொண்டு அல்லல்படுவது நமது குற்றமேயாகும். ஆகையால் எக்காரியமும் தன்புத்தியால் தீர்மானித்து பிறகு அதை அலட்சியம் செய்யாமல் நடந்தால் மேன்மைபெறலாம். இதுவே புத்தியின் காரியம். இதனாலேயே புத்தியை நல்ல சிநேகிதனாகச் சொல்லுகிறார்கள். இந்த புத்தி சிநேகிதனைவிட்ட நவீன நாகரீக மேதாவிகள் விவிதரூபமான உலக சிருஷ்டியை மாற்றி அமைக்கக்கருதுகிறார்கள், இவர்கள் தன் புத்தியை மனிதன் ஆள்கைக்குள்ப் படுத்தி சஞ்சலத்தால் ஒவ்வொரு க்ஷணத்திலும் அபிப்ராயபேதங்கொண்டு தங்கள் மனதிற்குத் தோன்றியபடியெல்லாம் பேசவும் முயற்சிக்கவும் துடங்கிவிடுகிறார்கள். இவர்கள் பரம்பராசாரம், வேதம், சாஸ்திரம், புராணம், இவைகளை நிந்தித்து நிராகரித்தும் வருகிறார்கள், ஸ்ரீராமன், ஸ்ரீ கிருஷ்ணன் முதலிய அவதார புருடர்களுக்கும் சில குற்றங்களை ஸ்தாபிக்கிறார்கள். அவ்விதமிருக்கும்போது அபூர்ணர்களான மனிதனின் காரியத்தைப் பற்றிச் சொல்லவும்வேண்டுமோ: மகான்களை நிந்திப்பது காலத்தின் வித்தியாஸமேயாம். பிராமணாதிகள் அவரவர்களின் வர்ணங்களைவிட்டு ஜீவிக்கமுடியாது. ஜாதிபேதமில்லாதவர்கள் ஜாதியை நிந்திப்பார்கள். அவித்துவான் வித்வானை ஹிம்சிப்பான், பண்டிதன் பாமரனை நிந்திப்பதில்லை. நவீன மேதாவிகள் மனிதவர்க்கம் யாவும் ஒன்றுதான் என்று வாதிக்கிறார்கள். இது நிந்தையேயாம். மனித வர்க்கத்தில் வெள்ளை,

கறுப்பு, என்று பிறவியிலேயே வித்தியாஸமுண்டு. அதினும் காட்டுமனிதன், நாட்டுமனிதன் என இவ்விதமுண்டு. காட்டு மனிதன் மனிதனையே தின்று ஜீவிக்கிறான். மனிதனைத் தின்று ஜீவிக்கும் மனிதனும் அதல்லாத மனிதனும் எங்ஙனம் ஒன்றாக முடியும். நாட்டுமனிதர்களிலேயே மாமிஸபுக்குகள், சசியபுக்குகள் என்று இருவகைபேதமுண்டு. மாம்ஸபுக்குகளின் சுபாவம் நிந்த்ய மானதும், கொடூரமானதுமாகும். சசியபுக்குகளின் சுபாவம் ரம்மியமும், சாந்தமுமாகும். இவ்விருவர்களும் எவ்விதம் யோஜிப் பார்கள். மாமிசபுக்குகளான வியாக்கிராதி துஷ்ட ஜெந்துக்க ளையும், திருணசசியபோசிகளான ஆடு, மாடு, முதலியவைகளையும் பரஸ்பர விரோதிகளாகவே ஈசன் வகுத்திருக்கிறார். மத்தியத்தை வியாபாரம்செய்கிறவன், அதைப்பானம்செய்கிறவன் இவர்களின் சுபாவமும், அதில்லாதவர்களின் சுபாவமும் ஒன்றுபோலல்லவா'' மலத்தைச் சுமக்கும்தோட்டியும், மனிதனல்லேவா! அவனை யார் உயர்ந்தவர்களுடன் சேர்த்துக்கொள்கிறார்கள். ராட்சஸம், பைசாசம், என்ற விவாஹவிதியை அனுஷ்டிக்கும் காட்டு மனிதர் களின் சுபாவமும், பிராம்மம், தைவம், முதலிய விவாஹவிதியை அனுஷ்டிக்கும் நாட்டுமனிதர்களின் சுபாவமும் வெகு வேறுபட்ட தாகவேயிருக்கிறது.

சுவர்க்கத்திலும், தேவர், அசுரர், ராட்சதர், யட்சர், கின்னரர், கிம்புருடர், முதலிய அனேக ஜாதிபேதங்களுண்டு. இந்த ஆகாய கதியுள்ளவர்களெல்லாம் ஒரேபிதாவாகிய ''காசிபரிஷியின்'' சந்தா னங்களேயாம். ஆனாலும் வெவ்வேறாகவே, ஆசாரங்களால் பிரிந்திருக்கிறார்கள். தவிரவும் பாம்பின் ஜாராயுவில் உள்பட்ட தெல்லாம் ஒன்றுபோலிருப்பதில்லை. அவைகளில் படமுள்ளதும் இல்லாததும் கருப்பு, வெளுப்பு, மஞ்சள், நிறம். நிலத்திலும், ஜலத்திலும் வாழும் சுபாவமும், விஷமுள்ளதும் இல்லாததும். சிறிய சரீரம், பெரிய சரீரம் முதலிய வித்தியாஸங்களுள்ளதும், இவைகள் ஒன்றுபோலே ஒரேவிதமாக வாழ்வதும், ஸஹஜமில்லை. இதுபோலவே வன மிருகவர்க்கத்திலும் பூமியிலுள்ள விருட்சம் செடி, கொடி, இவைகளிலும் வித்தியாசமாகவே ஈசனின் சிருஷ்டி ஏற்பட்டிருக்க இவைகள் யாவும் ஒன்று என்று சொல்லும் மனி தர்களுக்கு அவ்விதம் அனுஷ்டிக்க ஒருபோதும் முடியாதகாரிய மாகும். மனதைப்புத்தியின்கீழ் அடக்கி பிரபஞ்ச சிருஷ்டிமகி

மையைச் சிறிது உத்தமபுத்தியாக விசாரித்தால் எல்லாம் ஒன்று தான் என்று ஒருபொழுதும் சொல்லமாட்டார்கள். நவீன வித்தியாப்பியாசமுறையாக மனம், புத்தி, இவைகளின் உத்பத்தி ஸ்தானம், குணம். செய்கை முதலியவைகளையறியப்படாத குற்றத்தாலும் இவைகளை விளக்கி சந்தேகமின்றி தெளிவடையச் செய்யும். இந்துமத ரகசிய சாஸ்திரங்களை அறியப்படாத குற்றத்தாலும், சாரமற்ற வீண்வாதம் உண்டாகிறது. வாசகர்களே! நாம் நல்லவழியில் புத்தியைக் கேட்டு நடப்போமாளுல் பூர்ண சுவதந்திரர்களாக வாழ்வோமென்பதில் சந்தேகமில்லை.

K. S. சங்கரராமசர்மா

பிராம்மணபாகங்கள்வேதங்களன்ரு?

வைதிகமதத்தில் தர்மாதர்மங்களுக்கு வேதமே ப்ரமாணமாக ஒப்பப்பட்டுள்ளது. வேதத்தினுல் எந்தக்கார்யம் விதிக்கப்படுகிறதோ அது தர்மம் என்றும், செய்யக்கூடாது என்று தடுக்கப்படுவதே அதர்மம் என்றும் அவர்களது கொள்கை.

அவ்வித வேதம் மந்திரம், ப்ராம்மணம் என்று இருவகையானது. வேதத்திலுள்ள மற்ற பாகங்களான அர்த்தவாதங்கள் ப்ராம்மணங்களைச் சேர்ந்தவை. இந்த அபிப்ராயம்

मन्त्रब्राह्मणयोर्वेदनामदयं ब्राह्मणशेषोर्थवादः ।

என்ற ஆபஸ்தம்ப ஸூத்திரத்தை அநுஸரித்தது. ஜைமினி மஹர்ஷியோ, **ब्राह्मणशब्दः** என்று வேதத்தின் மந்திரபாகங்களைத் தவிர மற்ற எல்லா பாகங்களுக்கும் நேரிலேயே 'ப்ராம்மணம்' என்ற பெயருண்டென்று வெளியிடுகின்ருர்.

கணுதர் '**तद्वचनादाम्नायस्य प्रामाण्यम्**' என்று சொல்வதால் தர்மத்தைச் சொல்லுவதாலேயே வேதத்திற்கு ப்ராமாண்யம் ஏற்படுகிறதென்று சொல்லுகின்ருர். மற்ற மஹர்ஷிகளும் வேதத்தின் ஸகலபாகங்களாலும் தர்மமே வெளியிடப்படுவதாகச் சொல்லுகின்றனர்.

இங்கு மந்திரப்ராம்மணூர்த்தவாதரூபமான வேதம் எவ்விதம் தர்மத்திற்கு ப்ரமாணமாகிறதென்பதை ஆராய்வோம்.

'कर्मचोदनानि ब्राह्मणानि' என்ற வசனத்தால் கர்மாக்களை (கர்மத்தை) விதிப்பவைகள் ப்ராம்மணங்கள் என்றும், மந்திரங்கள் கர்மகாலத்திலேற்படவேண்டிய கர்ம, தேவதாதிகளின் ஸ்மரணத்தை உண்டுபண்ண ஏற்பட்டவை யென்றும் அறியப்படுகிறது. அர்த்தவாதபாகங்களோ விதிக்கப்பட்ட கர்மாக்களை ஸ்தோத்திரம் செய்வதற்கும், தடுக்கப்பட்ட கர்மாக்களை தூஷிக்கவும்ஏற்பட்டன. ஆகவேவேதத்தின் ஸகலபாகங்களும் தர்மாதர்மங்களுக்கு ப்ரமாணமாகின்றன. இங்கு मन्त्रब्राह्मणे यज्ञस्य प्रमाणं என்ற ஆபஸ்தம்ப வசனமும் கவனிக்கத்தக்கது.

மந்திர ப்ராம்மணபாகங்கள் தர்மாதர்மங்களுக்கு ப்ரமாணமாவதால், அவைகளுக்கு வேதத்வமுண்டென்பது மநு, ஸாத்யாஷாட, பாரத்வாஜ, காத்யாத்னர் முதலிய ஸகல மஹர்ஷிகளுடைய ஸித்தாந்தம்.

மந்திரப்ராம்மணாத்மகமான வேதம், நித்யமானதென்றும் அபௌருஷேயமானதென்பதும் மஹர்ஷிகளின் மதம்.

சிலர் இக்காலத்தில் நமது வேதங்களில் ஸ்வச்சந்தமாக விமர்சங்களைச் செய்து பல விபரீத அபிப்பிராயங்களை வெளியிட்டதுடன், புஸ்தகரூபமாகவும் எழுதி வைத்துவிட்டனர்.

அவர்களில் ஒரு சாரார் வேதத்தின் மந்திரபாகங்களை இருவகையாகப் பிரித்து அவைகளுக்குச் 'சந்தஸ்' மந்திரம் என்ற இருவிதமாகப் பெயர்களைக் கொடுக்கின்றனர். அதில் மந்திரபாகம் சிறிது நவீனமென்றும், சந்தஸ் என்ற பாகம் அதற்குச் சிறிது காலத்திற்குமுன் உண்டாயிற்று என்றும், கூறுகின்றனர். अग्निः पूर्वेभिर्ऋषिभिरीड्यः। என்ற மந்திரத்தால் வேதம் ஏற்படுவதற்கு முன்னால் ஒரு காலம் இருந்திருக்கவேண்டுமென்று ஓர் முடிவைச் செய்து அதற்குத்தகுந்த சில யுக்த்யாபாஸங்களை வெளியிட்டு வேதத்திற்கு ஜாதகங் கணித்து பிறந்த லக்நத்தையும் தாங்கள் வெளியிட்டுவிட்டதாகமனப்பால்குடிக்கின்றனர்

अनादिनिधना ह्येषा वाक्, वाचा विरूपनित्या ।

என்றவைபோன்ற ப்ரமாணசதங்கள் வேதம், அநாதி என்று சொல்லுவதை அவர்கள் லக்ஷ்யம்செய்யாமலே வேதத்தின் உத்பத்திகாலத்தை விமர்சம்செய்கின்றனர்.

தயானந்தர் தமது பாஷ்யத்தில், இவ்வித வாதத்தை வன்மையாகக் கண்டிக்கிறார். ஆனால் அவர்கள்போன்றே இவரும் ப்ரமாணங்களை லக்ஷ்யம்செய்யாமல் ப்ராம்மணபாகங்கள் மஹர்ஷிகளால் செய்யப்பட்டனவென்று சொல்லுகின்றார். ப்ராம்மண பாகங்கள் கல்பிதங்கள் என்பதற்கு வைதிகமதத்தைச்சேர்ந்த க்ரந்தங்களே, ப்ரமாணமாவதாகவும், தயானந்தர் சொல்லுகின்றார். ஆனால் இவரது வாதத்திற்கு இவர் எடுக்கும் க்ரந்தங்களில் ஒரு வரிகூட ப்ரமாணமாக ஆகவில்லை என்பதையவர் கவனிக்கவில்லை.

முதலில் ப்ராஹ்மண பாகங்கள் கல்பிதங்களென்றால் வைதிக மதத்தில் உண்டாகக்கூடும் அனர்த்தத்தைச் சிறிதுசொல்லுவாம்.

தயானந்தரது அபிப்ராயப்படி மந்திரபாகத்தைத் தவிர மற்ற எல்லா பாகங்களுக்குமே ப்ராஹ்மணம் என்றுபெயர். ஆகவே அவரது அபிப்ராயப்படி விதிபாகங்களும் மஹர்ஷிகளால் கல்பிக்கப்பட்டவைகளாகும். அவ்விதமானால் வேதம் விதிப்பதே தர்மம் என்ற வைதிகமதக்கொள்கை நிர்மூலமாக ஆகிவிடும். மந்திர பாகங்கள் தர்மத்தை விதிக்காதுகளன்றோ!

தர்மத்தை வேதம் வெளியிடுவதற்காக அதற்கு நித்யத்வத்தை ஸாதிக்கப்படும் ச்ரமமும் வ்யர்த்தமாகும். மந்திரபாகம் தர்மத்தைச் செய்யும்படி விதிக்கவில்லையன்றோ! ब्राह्मणोक्ताविधयः என்று ஆபஸ்தம்ப மஹர்ஷி பெரும்பாலும் ஸ்மார்த்தவிதிகள் ப்ராம்மணபாகங்களிலிருந்தே உண்டாகின்றன என்று அப்பிராயப்படுகின்றார். ப்ராம்மணபாகங்கள் கல்ப்பிதங்களானால், கல்ப்பிதத்தை மூலமாகவுடைய ஸ்மிருதிகளுக்கும் ப்ராமாண்யம் ஸித்திக்காது. ந்யாயஸூத்திரத்தில் கௌதமர்:—

तदप्रामाण्यं अनृतव्याघातपुनरुक्तिदोषेभ्यः ।

என்றாரம்பித்து ப்ராம்மண பாகங்களுக்கும் ப்ராமாண்யத்தை வெளியிடுகின்றார். ஜைமினி மஹர்ஷியும் அர்த்தவாதாதி காரணத்தில் அர்த்தவாதங்களுக்கும் ப்ராமாண்யத்தை ஸ்தாபிக்கின்றார். வெகு ஸமீபத்தில் ப்ராம்மணபாகங்கள் கல்ப்பிக்கப்பட்டவைகளானால் இவர்கள் ஏன் இவ்விதம் ச்ரமப்பட்டு ப்ராமாண்யத்தை ஸாதிக்கவேண்டும். ஆகவே, ப்ராம்மணபாகங்கள் கல்ப்பிதங்கள் என்பது வைதிகமதத்திற்கு விபரீதமானதே.

தயாநந்தரும் மந்திரபாகங்களை அநாதியென்று சொல்வதிற்கு

यो ब्रह्माणं विदधातिपूर्वं यो वै वेदांश्चप्रहिणोति ।

என்றதுபோன்ற ப்ரமாணங்களையெடுக்கின்றார். ஆனால் இவ்விடங்களில் மந்திரபாகம்மட்டும் சொல்லப்படவில்லை. வைதிக உலகிலோ மந்திர ப்ராம்மணங்களுக்கே வேதம் என்ற ப்ரஸித்தி இருக்கின்றது. ப்ரமாணங்களோ 'வேதம் உபதேசிக்கப்பட்டது' என்று ஸமாந்யமாகவே சொல்லுகின்றன. இவ்விதமிருக்க வேத சப்தத்தால் மந்திரத்தைமட்டும் வாங்கிக்கொண்டு ஏன் கஷ்டப்படுகிறாரோ? அறியோம்! இவரைப்போன்ற மற்றொருவன் ப்ராம்மண பாகங்களே அநாதியானவை மந்திரபாகங்களோ அந்தந்த மஹர்ஷிகளால் செய்யப்பட்டன என்று சொன்னால் யாது பதில் கூறுவாரோ!

இவ்விதம் கவனித்தால் மந்திர ப்ராம்மணங்கள் மிகவும் அவச்யமானவை என்றும் அவைகளே வேதங்கள் என்றும் ஏற்படுகிறது. ஸகல ப்ரமாணங்களும் मन्त्रब्राह्मणयोर्वेदनामधेयं என்று ஒரேமுகமாக உத்கோஷிக்கின்றன. வியாசபகவான் अतएवचनित्यत्वं என்பதால் மந்திர ப்ராம்மணரூபமான வேதத்திற்கு நித்யத்வத்தை ஸ்தாபித்துவிட்டார். ஜைமினி மஹர்ஷியும் வேதாபௌருஷேயத்வாதிகரணத்தில் அபௌருஷேயத்வத்தை வெளியிட்டுவிட்டனர். ந்யாயஸூத்திரத்திலும், கௌதமர் மந்திர ப்ராம்மண ஸாதாரணமான ஆக்ஷேபங்களை எழுப்பி ப்ராமாண்யத்தை ஸ்தாபித்துவிட்டார். ஜைமினியும் அர்த்தவாதாதிகரணத்திலும் ப்ராம்மண பாகங்களில் ஏற்படக்கூடிய ஆக்ஷேபங்களை பூர்வபக்ஷம் செய்து அர்த்தவாத பாகங்களின் ப்ராமாண்யத்தை ஸ்தாபித்துவிட்டார். மஹர்ஷிகளின் ஸித்தாந்தம் இவ்விதமிருக்க, தயாநந்தர் அவர்கள் வேதமென்று ஒப்பின ப்ராம்மணபாகங்கள் வேதம் அன்று என்று சொல்வதற்கு சில யுக்திகளைச் சொல்லுகின்றார்.

இவரது ஆக்ஷேபங்கள், ஜைமினிமஹர்ஷி முதலியவர்களின் பூர்வபக்ஷ அபிப்ராயத்தால் இவரது ஸித்தாந்தம் கண்டிக்கப்பட்டதே. ஆனாலும் மறுபடியும் பூர்வபக்ஷங்களையே இவர் ஸித்தாந்தமாக வெளியிடுவதால் இவைகளை மறுமுறை மஹர்ஷிகளின் அபிப்ராயங்களைக்கொண்டு யுக்திகளை விசாரிப்போம்.

ராமாநுஜதாதாசாரியார்.

(தொடரும்.)

ஈசாவாஸ்ய த்வைதபாஷ்ய விசாரம்.

ஈசாவாஸ்யமென்ற உபநிஷத்திற்கு ஆனந்த தீர்த்தாசாரியா ளும் வியாக்கியானம் செய்திருக்கிறார்கள். அவர் அதில் "காண்வ" பாடத்தைத்தான் ஆதரித்துள்ளார். இவாளுடைய பாஷ்யம் மற்றபாஷ்யம்போன்றதன்று. நவீன சம்பிரதாயமாகவேதானி ருக்கிறது. ஈசாவாஸ்ய மூலத்தைக்காட்டிலும்கூட இவர் பாஷ் யம் வெகு சுருக்கமாயிருக்கிறது. இப்படியே ஸகல உபநிஷத் துக்களுக்குமே இவருடைய பாஷியம் மூலத்தைக் காட்டிலும் வெகு சுருக்கமானதே யாகும். ஆனால் மூலத்திலும் பாடபேதம் மற்ற உபநிஷத்துக்களில் இவர் கற்பிப்பதுண்டு. அது இவ்வுபனிஷத்திலில்லை என்பது விசேஷம். இதற்கு இவர் கூறிய அர்த்தமெல்லாம் வெகு அபூர்வமாயிருக்கிறதென்பதில் ஸந்தேஹமில்லை. இவரும் தற்கால நவீன சீர்திருத்த சங்காபி மானிகளைப்போல் தமது புத்திக்குத் தோன்றியவாறு வேதார்த் தம் கூறுகின்றார். தம்முடைய அர்த்த விசேஷத்துக்கு ஆதார மாக இவர் எடுத்துக்காட்டிய, சுருதி, ஸ்மிருதி புராணம் முதலிய பிரமாணமும் தமது புத்தியில் தோன்றினதேயாகும். ஸர்வஜனப் பிரஸித்தமாயுள்ள, சுருதி ஸ்மிருதி புராணாதிகளெல்லாம் இவரு டைய அபிப்பிராயத்திற்கு அனுகுணமாக இருக்கமாட்டாதாகை யால் தமது அபிப்ராயத்துக்கு அநுகுணமாக அநேகசுருதிகளையும் ஸ்மிருதி புராணாதிகளையும் ஏற்படுத்திக்கொண்டு சிஷ்யர்களுக்குத் தம்மிடம் "கேவல யுக்திவாதி" என்ற சங்கைநீங்கி "மஹாபுருஷ ரெ"ன்ற மஹத்துவபாவனை ஏற்படும்வண்ணம் தமது ஸ்வபாவத் தைக்கபடமாகமறைத்துக்கொள்கிறார்என்பது தத்வவிசார நிபுணர் களுக்குவிளங்காமலிருக்காது.

ஆனந்த தீர்த்தாசாரியாள் "ஸ்வாயம்புவமனுவானவர் ஆகூ தியின் புதல்வனாகிய மஹாவிஷ்ணுவை இவ்வுபனிஷத்தால் துதித் தாரெ"ன்று அபிப்பிராயப்படுகிறார்கள். இதற்கு இவருடைய வசனந்தான் பிரமாணம். வேறு பிரமாணமில்லை. அப்படிப் பிர மாணமிருப்பினும் அதனை ஆரம்பத்தில் சொல்வதற்குப் பிரயோ ஜனமில்லை. மனுவுக்கு இவ்வுபனிஷத்தால் பகவானுடையப் பிர ஸாதம் கிடைத்திருப்பதுதான் பிரயோஜனமென்றால் "உபனிஷத் துக்களுக்குப் பிரயோஜனமில்லை" என்றசங்கை வைதிகரொருவ

ருக்கும் உண்டாகாதாகையால் அதனை பாஷ்யாரம்பத்தில் பிரமாணங்களுடன் எழுதவேண்டியது பாஷ்யகாரர்களுக்கு அழகில்லை, அவசியமுமில்லை. ஸஹஸ்ரநாமம் முதலிய ஸ்துதி பாராயணாதிகளுக்குமே பகவானுடைய பிரஸாதத்தை அடைவதுதான் முக்கியப் பிரயோஜனம் என்றல்லவா? வைதிக ஸித்தாந்தம்.

மனுவானவர் முதலில் ஈசாவாஸ்ய மந்திரங்களை தபோமஹிமையால் கண்டுபிடித்துப் பகவானைத் துதிசெய்தாரென்பதும் ஸரியானதல்ல. ஈசாவாஸ்ய மந்திரங்களை முதலில் கண்டுபிடித்தவர் "தத்யங்ஙாதர்வணர்" என்ற மஹரிஷியேயொழிய ஸ்வாயம்புவமனுவல்ல. இவ்விஷயம்

दध्यङ् ह वा आथर्वणः एतं शुक्रं एतं यज्ञं विदांचकार ।

என்ற சுருதியாலும்

ऋचं वाचं पञ्चाध्यायीं दध्यङाथर्वणो ददर्श अग्निराश्वमेधिकवर्जं ।

என்ற ஸர்வானுக்கிரம ஸூத்திரவசனத்தாலும் வெகு ஸ்பஷ்டமாய் விளங்கும். ஆதலால் இதனைக்கண்டுபிடித்தவரென்றுமனுவை ஒப்புக்கொள்ள, ஒருக்காலும் ஸரிப்படாதாகையால் இவரைப்பற்றிய ஆனந்த தீர்த்தாசார்யாளின் அபிப்பிராயமெல்லாம் அஸங்கதந்தான்.

எல்லா பாஷ்யகாரர்களும் தமது பாஷ்யாரம்பத்தில் மூலத்துக்கு முன் ஸந்தர்ப்பங்களுடன் ஸங்கதியை அல்லவா அவதாரிகையாகக் கூறுவது வழக்கம். அதனைக்கொஞ்சமும் சொல்லாமலிருப்பது பாஷ்யகாரர்களுக்கு அழகாகுமா? நிற்க, இவ்வுபநிஷத்தின் ईशावास्यं என்ற முதலாவது வாக்கியத்திலேயே ஆனந்த தீர்த்தாசாரியாள் கண்களில் குட்டிக்கொள்கிறார்.

இதனை இவர் ஒரே பதமாக அபிப்பிராயப்படுகிறார். ஒரே பதமாயிருந்தாலும் அதிக அர்த்த வித்தியாஸமென்பதில்லை என்றாலும் ஒரே பதமாக வைப்பது பதகாரர்களின் ஸம்பிரதாயத்துக்கு விருத்தந்தான். இப்படியே (2) பதமாகத்தான் சுக்ல யஜுர் வேதிகளெல்லோரும் அத்யயனம் செய்துகொண்டு வருகிறார்கள். பதகார ஸம்பிரதாயத்தை அப்பிரமாணமென்று அங்கீகரிக்கலாமா? பதகார ஸம்பிரதாயத்திற்கு விரோதமில்லாமலேயேதான் "ஸாயணர்" முதலிய மற்ற பாஷ்யகாரர்கள் பாஷ்யம் எழுதுவது வழக்கம்.

ஆகவே ஒரு பக்ஷமாக வைப்பது ஒருபோதும் ந்யாயமாகாது. இம்முதலாவது மந்திரத்துக்கு த்வைதிகளின் பாஷ்யமாவது—

"பகவானுடைய வாசஸ்தலமாகிய இப்பிரபஞ்சமெல்லாவற்றையும் அவருடைய அனுக்ரஹத்தால் அடைந்துநாமெல்லோரும் அனுபவிக்க வேண்டுமேயன்றி பகவானைத்தவிற மற்றவரிடமிருந்து அடைந்து அனுபவிக்கலாகாது. அதற்காக மற்றவரை யாசிக்கவும் கூடாது" என்று

இதே மந்திரத்திற்கு அத்வைதிகளின் பாஷ்யமாவது—

"பகவானுடைய பரமார்த்தஸ்வரூபத்தால் இப்ரபஞ்சமனைத்தையும் மறைத்துவிடவேண்டும். (பொய்யென்று எண்ணவேண்டும்) இப்படி இப்பிரபஞ்சத்தை பொய்யென்று மறந்த, முமுக்ஷுக்களுக்கு ஸந்யாஸத்தில் தான் அதிகாரமேற்படுமாதலால் ஸன்யாச்ரமஸ்விகாரத்தால் ஆத்மஞானமடைந்து முமுக்ஷுக்கள் தன் ஸ்வரூபத்தை பரிபாலித்துக் கொள்ளவேண்டும், மனைவி மக்கள், பணம் என்ற மூன்று காமங்களையும் அறுத்தெறிந்து ஸன்யாஸியாகவிருக்கும் உனக்கு திரவியத்தில் ஆசை ஏற்படக்கூடாது, அப்படி ஏற்பட்டால் அதை பொய்யென்ற பாவனையால் விலகிக்கொள்ளவேண்டும்" என்று

இவ்விரு பாஷ்யங்களில் எது சிலாக்யம் என்ற விஷயத்தை நிர்ணயஞ்செய்துகொள்வதில் பிரியவாசகர்களுக்கே பாரத்தைக் கொடுத்துவிடுகிறேன்.

ஆனால் இவற்றுள் ஒரு விசேஷம் கவனிக்கத்தக்கது. இம் மந்திரத்தின் த்வைத பாஷ்யார்த்தமானது அத்வைதிகளுக்கு விருத்தமில்லை. அத்வைதிகளின் அர்த்தமோ? த்வைதிகளுக்கு விருத்தந்தான். அத்வைதமதத்தில் பாஹ்ய உலகஸுகானுபவம் ஆத்மதத்வ ஞானிகளுக்குகிடையாதென்பதில்லை. ஆகவே வியவஹாரதசையில் உலகஸுகானுபவத்தை பிரதிபாதிக்கிறதாகத்வைத பாஷ்யத்தையும் ஸமரஸப்படுத்திக்கொள்வதில் அத்வைதிகளுக்கு ஆக்ஷேபமேயில்லை. உலகிலுள்ள மதமொன்றையாவது அத்வைத மதம் த்வேஷிப்பதில்லை என்பதுதான் அத்வைதமதத்திற்குகௌரவம். த்வைதிகளோவெனின்? அத்வைதிகளின் பாஷ்யார்த்தத்தை அங்கீகரிக்கவில்லை. அதற்குக்காரணம் தெரியவில்லை. உபநிஷத்

னுக்களில் மோக்ஷஸ்வரூபம், அதன் ஸாக்ஷாத், பரம்பரா காரணமும்தான் சொல்லப்படவேண்டுமேயொழிய விஷயஸுகமும், அதன் காரணமுமல்ல. விஷயஸுகானுபவமென்பது யாவரும் வெறுக்கவேண்டியதல்லவா? ஸ்வர்கம் வைகுண்டம், கைலாஸம், முதலிய பரலோக ஸுகானுபவத்தை நான்காவது மோக்ஷபுருஷார்த்தமாக எப்படி ஒப்புக்கொள்ள முடியும். அங்ஙனமாயின் அர்த்தகாமவடிவமாகவே மோக்ஷமென்பது ஸித்திக்குமேயன்றி நான்காவதாக ஸித்திக்கமாட்டாது. ஆகவே மோக்ஷதசையிலுங்கூட விஷயஸுகானுபவத்தை ஆமோதிக்கும் த்வைதிகளின் ஸித்தாந்தம் பிரமாணவிருத்தமேயாகும்,

பகவத் பக்தர்களுக்கு விஷயஸுகானுபவம் வெறுக்கத்தக்கதல்லவென்று சொல்வதும் சரியல்ல. நிஷ்காம பக்தர்களைக் காட்டிலும் ஸகாமபக்தர்களைக்குறைவாகக்கூறும், ஸ்ரீமத் பகவத் கீதை முதலிய பிரமாணக் கிரந்தங்களிலிருந்து அவர்களுக்கும் விஷயஸுகானுபவம்வெறுக்கவேண்டியதென்பது வெகு ஸ்பஷ்டமல்லவா? பகவானிடம் பக்தி வேறூன்றுவதற்காகவே விஷய வைராக்கியம் பக்தர்களுக்கும் வேண்டியதில்லையா? ஆகவே, எவனுக்கு விஷயாசை விடவில்லையோ? அவன் உத்தம பக்தன் ஆவானா?

பகவத் பக்தர்கள் "இது என்னுடையது" என்ற அபிமானமற்று, விஷயஸுகத்தை அனுபவிப்பார்கள். மற்றவர்களோ அபிமானத்துடன் அனுபவிப்பார்கள். ஆதலால் விஷயங்களைத் "தன்னுடையது" என்று அபிமானிக்கலாகாது, என்று த்வைத பாஷ்ய தாத்பர்யம் சொல்லக்கூடாதோவென்றால், இவ்வித தாத்பர்யமிருப்பதாக த்வைத பாஷ்யத்திலிருந்து தெரியவில்லை. பகவானுடைய அனுக்ரஹத்தால் விஷயங்களை அடையவேணுமேயன்றி மற்றவரை விஷயங்களையடைவதற்காக "யாசிக்கலாகாதெ"ன்றல்லவா த்வைதபாஷ்யம்.

तदधीनप्रवृत्तित्वात्तदीयं सर्वमेव यत् ।
तद्दत्तेनैव भुंजीथा अतो नान्यं प्रयाचयेत् ॥

இதிலிருந்து அபிமானத்தைவிடவேண்டுமென்ற அர்த்தம் எப்படி வெளியாகும்? मागृधः कस्यस्विद्धनं என்ற உபநிஷத்துக்குத் திரவியத்தில் அபிமானத்தை அகற்றவேண்டுமென்ற அர்த்தத்தை

அங்கீகரிக்காமல் "பகவானைத்தவிர மற்றவருடைய வஸ்துவை விரும்பாதே" என்றல்லவா இவர் மாற்றி அர்த்தம் கூறுகிறார். ஆகவே இவர்களுடைய அர்த்தத்திற்கு மூலத்தில் கொஞ்சமும் இடமில்லை. कस्यास्विद् என்று மூலமிருக்குமேயானால் த்வைத பாஷ்யம் ஒருவாறு பொருந்தலாம். गृधु = अभिकाङ्क्षायां என்றதாது விலிருந்து உண்டான गृधः என்ற பதத்திற்கு "யாசனை" என்ற அர்த்தம் எப்படிப் பொருந்தும். அப்படி भुञ्जीथाः என்ற பதத்திற்கும் அனுபவிக்கவேண்டுமென்று அர்த்தங் கூறுவது வெகு கிலேசம். இவ்வாறே "தேந" என்பதற்குப் "பகவானால்" என்ற த்வைதிகளின் அர்த்தமும் அஸங்கதந்தான். "ஜகத்யாம்" என்ற பதத்திற்கு "மூலப்பிரகிருதி" என்ற அர்த்தம் அபூர்வமாயிருக்கிறது. எங்கேயாவது மூலப்பிரகிருதியில் "ஜகத்யாம்" என்ற பதம் வழங்கப்பட்டிருக்கின்றதா? அப்படி வழங்கப்பட்டிருப்பதாக ஒப்புக்கொண்டாலும் அப் பதமானது ஓரிடத்திலும் அந்வயிக்கவில்லை. பிரகிருதியை நியமனம் செய்கிற பகவானுடைய வாசஸ்தலம் என்று ईशावास्य பதத்தோடு ஸமன்வயம் பண்ணிவிடலாமென்றால் அதுவும் சரிப்படவில்லை. "ஏகதேசான்வய" மென்ற தோஷமேற்படமாட்டாதா? ஆதலால் த்வைதமதத்தில் ஒரு பதத்திற்காவது ருசுவாக அர்த்தம்சொல்ல முடியவில்லை, என்ற விஷயம் ஸகலசாஸ்திர ஸம்மதமாகும். ஆகவே ஆனந்த தீர்த்தாசாரியாள் நியாயவிருத்தமாகவாவது இம் முதலாவது மந்திரத்துக்கு "விஷயங்களை பகவத் பிரஸாதத்தால் அடைந்து அனுபவிக்கலாம்" என்று அர்த்தங்கூறினதை பரிசீலனைசெய்தால், ஆனந்த தீர்த்தாச்சாரியாளுக்கும், அவர் சிஷ்யர்களுக்கும், அர்த்தகாமங்களில் அதிக ஆசை உண்டென்றவிஷயந்தான் வெளிப்படுகின்றது. இதனால் முமுக்ஷுக்களுக்கு த்வைதபாஷ்யம் உபயோகப்படாது. புபுக்ஷுக்களுக்குத்தான் உபயோகப்படும், என்பதும் ஸ்பஷ்டந்தான். ஆதலால் ஆஸ்திக முமுக்ஷுக்களனைவரும் ஆதிசிர்மல அத்வைத பாஷ்யார்த்தத்தையே யனுஸந்தித்து பேரின்பவீடுபெறப் பிரார்த்திக்கிறேன்.

முதலாவது பாகம் முற்றிற்று.

அத்வைதாபிமானி,

ஸ்ரீ நடேசஸ்துதி.

चन्द्रस्त्वयेश शिरसा विधृतः कलंकी
गङ्गा महेश बहुमार्गविसर्पिणी च ॥
हारीकृतो हृदि तथा विषभृत्भुजङ्गः
भूषायते त्वयि सदोषमतश्च वस्तु ॥८६॥

ஓ நாத! களங்கம் உள்ள சந்திரனையும் நீர் சிரஸில் தரித்திருக்கிறீர். பகுமார்க்கங்களில் சஞ்சரிக்கின்ற கங்கையையும் தரித்திருக்கிறீர். விஷங்களொடு கூடிய ஸர்ப்பங்களையும் ஹிருதயத்தில் ஹாரமாக தரித்து இருக்கிறீர். ஆகையால் தோஷமுடைய வஸ்துவும் உமக்கு அலங்காரமாக இருக்கிறது. (86)

तस्मादनन्यगतिमीश जनं सदोषं
संसारघोरदहनावृतमादरेण ।
त्वत्पादपद्ममकरन्दरसप्रदानात्
धन्यं करोषि यदि नाथ भवेत्क्षतिः का ॥८७॥

ஓ ஈச! வேறுகதி இல்லாத நான் தோஷம் உள்ளவனை ஸம்ஸாராக்னியினால் சூழப்பட்டவனை இந்த ஜனத்தை உம்முடைய சரணாவிந்தத்தில் இருக்கிற புஷ்ப ரஸத்தை தருவதால் தன்யனாக செய்வீரேயாகில் எனக்கு கஷ்டம் ஏது? (87)

विदितमविदितं वा कर्म कामेन कृत्वा
जननमरणरूपां दुर्गतिं प्राप्नुवन्ति ।
तदिह चरणपद्मं तावकं कामहान्यै
मुहुरहमभिवन्दे कामजेता यतस्त्वम् ॥८८॥

தர்மசாஸ்திரங்களால் விதிக்கப்பட்டதும், விதிக்கப்படாததுமான கர்மானல இச்சையினால் செய்து ஜனனமரணரூபமான கஷ்டகதியை ஜனங்கள் அடைகிறார்கள். நீர் காமனை ஜயித்து இருப்பதால் காம நாசத்தின்பொருட்டு உம்முடைய சரண பங்கஜத்தை நான் அடிக்கடி நமஸ்கரிக்கிறேன். (88)

नाथ त्वदीयकरुणारसपूर्णदृष्टिः
मन्देऽपि मय्यखिलनाथ पतेत्सकृच्चेत् ।

सद्य त्वदीयचरणांबुजयुग्ममेव
नूनं व्रजेयमिति चेतसि तर्कयामि ॥८९॥

ஓ! நாத கருணாரஸத்தினால் பரிபூர்ணமான கடாக்ஷமானது மந்தனான என்னிடத்தில் ஒருதடவை விழுமேயானால் உம்முடைய சரணகமலத்தையே அடைவேன் என்று என்னுடைய மனதில் நிச்சயிக்கிறேன், (89)

नाथ त्वदीयचरणांबुजपूजकं मां
त्वद्ध्यानसक्तहृदयं विजहासि चेत्त्वम् ।
नार्होऽस्सदंध्रिकमलश्रयणेऽसि पापः
कुर्यां किमीश भवतेति निराकृतोऽहम् ॥९०॥

ஓ நாத உம்முடைய திவ்விய சரணங்களையே பூஜிக்கின்றவனும் உம்மையே எப்பொழுதும் தியானம செய்கின்றவனுமான என்னை நீர் விடுவீரேயாகில் பாபமுள்ள நீ என்னுடைய சரணகமலத்தை, அடைவதற்கு யோக்யனில்லையென்று உம்மால் தள்ளப்படுவேனேயாகில் நான் என்னசெய்வேன். ஆகையால் கருணையால் என்னை திவ்யசரணகமலத்தை அடையும்படி செய்யவேணும்.

तमेव शरणं गच्छ सर्वभावेन भारत ।

அந்த ஈசனையே ஸர்வ பாவத்தாலும் சரணாகதி அடையவேணும் என்ற கீதாவசனத்தை இதில் தெரிவித்து இருக்கிறார் (90)

சிதம்பரம் ராஜா சோமசேகர தீக்ஷிதர்.

மனுஸ்மிருதி அத்தியாயம். 2

சில வசனங்கள்.

1. வேதத்தில் சொல்லப்படும் யாகம், ஹோமம், முதலிய கிரியைகள் ஸ்திரமான பயனைக் கொடுக்கிறதில்லை. ஓம் பத உச்சாரணமோ அழிவற்றபலனைக் கொடுக்கும். அச் சப்தமே சிருஷ்டி கர்த்தா, பிரம்மம்; அதைப் பூஜிக்கிறவனை ப்ரம்மத்தோடு சேர்ப்பிக்கும்.

2. அக்நிஷ்டோமம், தர்சபூர்ணமாஸம் முதலிய வேதத்தில் சொல்லப்பட்ட யக்ஞத்தைக்காட்டிலும் ஓம்காரமுதலான வ்யாஹிருதி, காயத்ரி ஜபம் பதின்மடங்கு மேலானது. அந்த ஜபமே கிட்ட இருக்கிறவன் கூட கேட்காதபடி, மெதுவாய்த் தாழ்ந்து செய்யப்பட்டால், நூறுமடங்கு மேலானது. அதுவே, உதடு அசங்காமல் மானஸமாய்ச் செய்யப்பட்டால், ஆயிரமடங்கு மேலானது.

3. வைச்வதேவ முதலிய நான்கு பாகயக்ஞங்களும் அக்நிஹோத்ரம் தர்சபூர்ணமாஸ முதலான வேதத்தில் விதிக்கப்பட்ட யக்ஞங்களும் சேர்ந்து ஜபயஞ்ஞத்தின் பலனில் பதினறில் ஒரு பங்கை (வீசம்பங்கைக்கூட) கொடுக்காது(காயத்ரீ ஜபம் எவ்வளவு உயர்ந்தது என்று இதிலிருந்து தெரிகிறது.)

4. பிராம்மணன் காயத்ரீ ஜபத்தினுலேயே மோக்ஷத்திற்கு யோக்கியனுக ஆகிறுன். இதில் ஸந்தேஹமேயில்லை. வேதத்தில் சொல்லப்படும் வேறு யாகாதி க்ரியைகளைச் செய்தாலும், செய்யாவிட்டாலும் ஸர்வ பிராணிகளிடத்திலும் ப்ரீதியுடன் நடக்கிறவன்தான் பிராம்மணன் ஆவான்.

5. ரதம் ஓட்டுகிறவன் ரதக் குதிரைகளை அடக்குவதில் யத்னம் செய்வதுபோல், படித்தவன் துர்விஷயங்களில் செல்லும் தன் இந்திரியங்களை பிரயாஸப்பட்டு அடக்கவேண்டும்.

6. முன்கால வித்வான்கள் பதினேரு இந்திரியங்களைக் குறிப்பிட்டிருக்கிறுர்கள். அவைகளில் முதல் ஐந்து—ச்ரோத்ரம், (காது) ஸ்பர்சம், நேத்திரம், நா, மூக்கு (வாஸனையறிவு). இரண்டாவது ஐந்து—குதம், ஜனனேந்திரியம, கை, கால்கள், பேச்சு, என்றவை.

7. முதலில்சொல்லிய ச்ரோத்திரம், முதலான ஐந்து இந்திரியங்களும் ஞானேந்திரியங்கள் என்றும், இரண்டாவதாகச்சொல்லப்பட்ட குதம் முதலிய ஐந்து இந்திரியங்களும் கர்மேந்திரியங்கள் என்றும் கூறுவார்கள்.

8. பதினேருவது இந்திரியம் மனது. அது ஸ்வபாவத்தில் ஞானேந்திரியங்கள்,கர்மேந்திரியங்கள் இவ்விரண்டிற்கும் பொதுவானது. அந்த மனது என்னும் இந்திரியத்தை அடக்கினுல்

ஞானம், கர்மம் இவ்விரண்டு சம்பந்தமான இந்திரியங்கள் பத்தும் அடங்கிவிடும்.

9. இந்திரிய விஷயங்களில் அகப்பட்டுவிட்டால் அச்சம் பந்தத்தால் மனிதனுக்கு பாபம் எவ்வளவோ ஏற்படும். அதில் சந்தேகமே இல்லை. இந்திரியங்களைத் தகுந்தபடி அடக்கி ஆளுவதினால் மோக்ஷம் முதலிய புருஷார்த்தங்கள் கிடைக்கும்.

10. இச்சை என்பது இச்சித்த பதார்த்தங்களை அனுபவிப்பதினால் அடங்குவதில்லை. நெய்விடுவதால் 'அக்னி விருத்தி அடைவதுபோல் இச்சையும் அனுபவத்தால் அதிகரிக்கிறது.

R. ஸ்வாமிநாதய்யர்.

சிறுவருக்கான சிறுகதைக் கொத்து.

பாண்டுவும் கிந்தமரும்

1. பாண்டு குந்தி மாத்ரி என்ற இருமனைவிகளைக் கல்யாணம் செய்துகொண்டான். பீஷ்மரை நமஸ்கரித்து திக்குகளை ஜயிக்கக்கிளம்பினான். எல்லா ராஜாக்களையும் ஜயித்தான் யதேஷ்டமாகதநத்தை ஸம்பாதித்துவந்தான். திருதராஷ்ட்ரனும் பீஷ்மரும் இதைக்கண்டு ஸந்தோஷப்பட்டார்கள். பிறகு பாண்டு இருமனைவியுடன் வேட்டையாட காட்டிற்குப்போனான்.

2. வேட்டை என்பது அவச்யமான காலத்தில் அரசர் செய்யவேண்டிய தர்மம். அளவில்லாமல் வேடிக்கையாக வேட்டை ஆடக்கூடாது. பாண்டு வேட்டையில் அதிக ஆசை வைத்தான். ஒருநாள் வழக்கம்போல் ஒரு மானை அடித்தான். அப்போது அந்த மான் பெண்மானுடன்கூடி ச்ருங்காரமாக விளையாடிக்கொண்டிருந்தது

3. பாண்டுவின் கூருன பாணங்கள் விழுந்தவுடன் அந்த மான் கீழேவிழுந்தது. அரசனே காரணமில்லாமல் என்னைக் கொன்றாயா? இதற்காகவா உனக்கு பாணம் ஏற்பட்டது? குற்றமற்ற என்னைக் கொன்று குணமென்ன கண்டாய்? என்றது. இதைக்கேட்ட பாண்டு மானே! வேட்டை ஆடுவது ராஜதர்மம்.

4. அகஸ்த்யர் ஓர் யாகம்செய்யும்போது மானைக்கொல்ல வில்லையா? என்றான். ராஜனே! மானைக்கொல்வதைப்பற்றி நான் கூறவில்லை. எல்லோரும் விரும்பும் சிற்றின்பத்தை அநுபவிக்கும்போது அடித்தது பாபம் என்றுதான் சொல்லவந்தேன். நான் மானல்ல. கிந்தமர் என்றரிஷி. தெரியாமல் கொன்றதால் ப்ரஹ்மஹத்தி பாபம் வராது.

5. ஓர் குழந்தை பிறக்கவேண்டுமென்று ஆசைப்பட்டேன். மான் சரீரமெடுத்து பெண்மானுடன் கூடினேன், இச்சமயத்தில் நீ கொன்றாய் என் இஷ்டம் பூர்த்தியாகவில்லை. ஆகையால் உன் மனைவியைத்தொடும்பொழுது இறப்பாய். எவளைத்தொடுகிறாயோ அவளே உனக்கு யமலோகத்திற்கு துணையாகவருவாள் என்று சபித்தார்.

6. இதைக்கேட்டு பாண்டு பரமதுக்கம் அடைந்தான். இனி எனக்கு ராஜ்யம் வேண்டாம். மனைவிகளைப்பார்த்து நீங்கள் நகரத்திற்கு போங்கள். பீஷ்மர் ஸத்யவதி என்தாய் ஸஹோதரன் முதலியவர்களை விசாரித்தாக சொல்லுங்கள். நடந்ததைக்கூறி நான் தபஸ்செய்யப் போவதாகக் கூறுங்கள் என்றான்.

7. இதைக்கேட்டு குந்தியும் மாத்ரியும், துக்கப்பட்டனர். ஸ்வாமி! புருஷனை விடுவது தர்மமோ? நீங்களே எங்களுக்கு தைவம். நீங்களே பந்து! எங்களைக் கைவிடாதீர்கள்! உங்களை விட்டு ஒருநிமிஷமும் உயிரை வைத்திருக்கமாட்டோம்! எங்களுக்கு நாட்டில் என்னவேலை? புருஷன் இருக்குமிடமே ஸ்வர்க்கம்! என்றார்கள்.

8. பாண்டு, பதிவ்ரதைகள் ப்ரார்த்தனையைத்தட்ட முடியவில்லை. அவர்களுடன் கூடி தபோவநத்தில் வஸிக்கத் தீர்மானித்தான். தங்களது விலை உயர்ந்த ஆபரணங்களை ப்ராஹ்மணர்களுக்கு தானம்செய்தான். பரிவாரங்களை ஊருக்கனுப்பினான். அஸ்தினபுரத்திலுள்ளவர்கள் இதைக்கேட்டு வருத்தம் அடைந்தனர்.

9. பாண்டு பத்நிகளுடன் கந்தமூலங்களை ஆஹாரமாகக் கொண்டான், ரிஷிகளோடு சேர்ந்தான். நாகசதமென்றமலைக்கு

வந்தான். இமயமலையைத்தாண்டி கந்தமாதநத்திற்குப்போனான். இந்த்ரத்யும்ந மெனும் குளத்தில் ஸ்நாநபாநம் செய்தான். ஹம்ஸ கூடத்தைத்தாண்டி சதச்ருங்கமலை சென்று தவம் செய்தான்.

10. பெரியோருக்குப் பணிவிடைசெய்தான். இந்த்ரியங்களை அடக்கினான். ரிஷியைப்போல் ஆகிவிட்டான். ஒருஸமயம் ப்ரஹ்மலோகத்திற்கு கிளம்பின பிரும்ஹரிஷிகளைக் கண்டான். தானும் அவர்களுடன் புறப்பட்டான். அவர்கள் பாண்டோ! நில்! இங்கே நீ வரமுடியாது! கவலை அடையாதே! ஸத்புத்ரர்கள் பிறப்பார்கள். நற்கதிஅடைவாய் என்றனர்.

ஸ்ரீவத்ஸ வே ஸோமதேவசர்மா

வாரவிருத்தாந்தம்.

ஞாநவதீபவ! 10௨ மாயவரம் விச்வேச்வரஸ்வாமி கோவிலுக்கு மாது ஸ்ரீ பொன்னம்மாள் ரூ 700 செலவில் ஓர் வெள்ளி வாஹனம் (ப்ரதோஷஸ்வாமிக்கு ஏற்றபடி) செய்துகொடுத்தாள். முன்னம் சென்னை ஸம்ஸ்கிருத கலாசாலைக்கு 20000ரூ நன்கொடை கொடுத்ததாக அறிகிறோம். பாத்ரமறிந்து த்ரவ்யத்தை ஸத்விநியோகம்செய்த இவ்வம்மையார் மதுரை வக்கீல் தார்மிக ஸ்ரீமான் என். நடேசய்யர் ஸகோதரியாவாள். ஈசனருளால் இவள் ஞானமடைவாளாக.

மன்னன் வாழ்க. 12௨ மைசூர் மஹாராஜா தமது சொந்த தனத்திலிருந்து 10000ரூ மஹம்மதிய அநாதாலயத்திற்கு அளித்தார். முற்கால ராஜாக்களின் அடிச்சுவட்டைப்பின்பற்றும்மைசூர் மன்னனது மனோநிலை மான்யர்களால் மதிக்கத்தக்கதாயிருக்கிறது. தார்மிகோ விஜயீபவது.

ஆயிரம்பேருக்கு அருசுவை போஜனம். 12௨ இடையக் கோட்டையில் உள்ளூர் ஜமீன்தார் குருபூஜையை முன்னிட்டு தானே அருகில்வந்து பந்திவிசாரித்து ஆயிரம்பேருக்கு அருசுவையுடன் அன்னமளித்தார். தானத்தில் அன்னதானம் சிறந்தது, அதிலும் ச்ரத்தை மிகமிகச் சிறந்தது.

ஆண்டுக்கு 180ரூபாய். 16உ சென்னை ஸம்ஸ்கிருதஸபையார் சென்னை மாகாண கலாசாலையில் பி. ஏ. ஹானர்ஸ் வகுப்பில் ஸம்ஸ்கிருதம் கற்கும் மாணவர்களுக்கு (ஸ்திரீயாயிருந்தால் மிகநல்லதாம்) மூன்ருண்டுக்கு ஆண்டொன்றும்மேற்குறித்தபடி தனஸஹாயம்செய்வதாக பிரசுரித்திருக்கின்றனர். இவர்களது பாஷாபிமானத்தையும் தானத்தையும் மெச்சுகிறோம். வாணியின் அருளால் இச்சபைக்கு பூர்ணவைதிகச்ரத்தை உண்டாகும்படி வேண்டுகிறோம்.

ஸன்மார்க்கோபதேசம்:—17உ ஸ்ரீபரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யாளாய் விளங்கும் ஸ்ரீகாமகோடி பீடாதிபதி ஸ்ரீஜகத்குரு ஸ்வாமிகள் திருப்பதியில் ஷை விஷயமாக தெலுங்கில் ஓர் உபன்யாஸம் செய்தார்கள். ஸ்ரீ அவாளை தர்சிப்பதே ஸன்மார்க்கம். ஸ்ரீமஹா ஸன்னிதானத்திலிருந்து பெருகி ஓடிய உபதேசாமிர்தத்தைப்பருகியோர் பாக்யசாலி.

நாமும் போற்றி வாழ்த்துவாம்:— 18உ கும்பகோணத்தில் மஹாபாரதத்தை தமிழில் வெளியிட்ட ஸ்ரீமான் ம. வி. ராமானுஜாசார்யாரை வாழ்த்த நற்சபைகூடிற்று, பல வாழ்த்துப்பாக்கள் படிக்கப்பட்டன, அவரது விடாமுயற்சியையும் தேசோபகாரத்தையும் மத கைங்கர்யத்தையும் பற்றி பலர் போற்றிப்பேசினர். இவ்விஷயமாக அவாள்பட்ட கடனை அடைப்பது ஆஸ்திகர் கடனாகும். ஆதலின் அவருக்கோர் பணமுடிப்பளிக்க முயற்சிப்பதுசாலவும் தர்மமே, பெரும்பணியிலீடுபட்ட பெரியாரைப்போற்றுவாம்.

அங்குமிங்கும்:—19உ ஜருஸிலம் ஜார்டன் நதிக்கரையில் மஹம்மதியர் கிருஸ்தவர் யூதர் ஆகிய இவர்கள் ஒன்றுகூடி மழை உண்டாவதற்காகக் கடவுளை ப்ரார்த்தித்தார்களாம். மூன்றுநாள் உபவாஸமிருந்து இப்படி வேண்டினுல் நாலாம் நாள் மழைபொழிவது வழக்கமாம். நமதுமதத்தில்தான் மழைவேண்டுமானுல் ச்ரௌதமாக காரீரேஷ்டி செய்வதென்றும், வருணஜபம் செய்வதென்பதும் வழக்கம். அங்கும் இதுபோன்றஸம்ப்ரதாயமுளது, ஆஸ்திக ச்ரத்தைக்கேற்ப பகவான் பலனளிப்பர்.

ஸத்காலக்ஷேபம்:—18உ காகிநாடாவில் ஓர் பென்ஷன் டிப்டி கலெக்டர் தலைமையில் ஸ்ரீ ஜடாவல்லபபுருஷோத்தமர் பி. ஏ. என்பவர் ஸ்ரீமத்ராமாயணத்தைப்பற்றி ஓர் உபன்யாஸம் செய்தார். வீண்காலக்ஷேபம் செய்யாமல் ஸத்காலக்ஷேபம் செய்யும் இவர்களைக்கொண்டாடுகிறோம். திருப்பத்தூர் ராமனுஜ புரத்தில் ஓர் பண்டிதரால் உபன்யஸிக்கப்பட்டுவந்த ஸ்ரீராமாய ணம் 17உ பூர்த்தியாக விசேஷவைபவத்துடன் ஸ்ரீராமபட்டாபி ஷேகம் நடந்தது.

ஸ்ரீ குருகைங்கர்யம்:—19உ சென்னை முத்யால்பேட்டை அமாகலாவிலாஸினி ஸபையினுடைய சாந்தாச்ரமத்தில் ஓர் சிறு ஸபைகூடிற்று. அச்சமயம் ஸ்ரீமடம் முத்ராதிகார ஸன்னது ஸ்ரீமான் கே. கங்காதரய்யருக்குக் கொடுக்கப்பட்டதைப் பலர் பாராட்டி, ஸ்ரீமான் அய்யர் பல தர்மகாரியத்தில் ஈடுபட்டிருப்ப தைப்போற்றி அவர் நீண்ட ஆயுளுடன் ஆரோக்யத்தையும் பெற் றிருக்கும்படி பகவானை வேண்டினர். கீழமாம்பலம் மேலமாம்ப லம் முதலிய இடங்களில் அக்ஷஸம்பாவனையை வசூல்செய்து ஸ்ரீ மதாசார்யபாதாளுக்குஉத்தமகைங்க்ரியம்புரியஇவர்முன்வந்தவர்.

ஸ்ரீவத்ஸ, வெ. ஸோமதேவ சர்மா.

வாழ்கவந்தணர் வானவ ரானினம்
வீழ்க தன்புனல் வேந்தனு மோங்குக
ஆள்கதீயதெல் லாமர னுமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்க்கவே.